தினமணி 09.08.2023

# போலீஸாரின் சித்ரவதையால் பாதிக்கப்பட்டவருக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

## மக்கள் கண்காணிப்பக இயக்குநர் ஹென்றி திபேன் தகவல்

மதுரை, ஆக. 8: சென்னையில் புத்தக விற்பனையாளரை சட்டவிரோதக் காவலில் சித்ரவதை செய்த வழக்கில், பாதிக்கப்பட்டுவருக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக மக்கள் கண்காணிப்பக இயக்குநர் ஹென்றிதிபேன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

சென்னை கோடம்பாக்கம் டாக்டர் சுப்பராயன்நகரைச் சேர்ந்த சுப்பிரமணியன் புத்தகம் விற்பனை செய்து வந்தார். இந்த நிலையில், கடந்த 2002-ஆம் ஆண்டு, நவம்பர் 29 ஆம் தேதி கே.கே.நகர் போலீஸார் நள்ளிரவில் அவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். அங்கு அவரது உடையை அவிழ்த்து, சித்ரவதை செய்துள்ளனர். 4 நாள்களாக காவல் நிலையத்திலேயே வைத்து சித்ரவதை செய்து சிலரின் பெயரைக் கூறித் தெரியுமா எனக் கேட்டுத் தாக்கினர். இதில் உடல் நலம் பாதிக்கப்பட்டதையடுத்து, போலீஸார் சுப்ரமணியனை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இதுதொடர்பாக மக்கள் கண்காணிப்பாகம் சார்பில், தேசிய மனித உரிமை ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட சுப்பிரமணியனுக்கு ரூ.20 லட்சம் இழப்பீடாகச் செலுத்தவும், 4 வாரங்களுக்குள் 8 சதவீதம் வட்டியுடன் செலுத்த வேண்டும் என்றும் கடந்த ஜூன் 14-ஆம் தேதி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. பாதிக்கப்பட்ட நாளில் இருந்து சுப்பிரமணியனுக்கு உரிய பாதுகாப்பு, சிகிச்சை அளித்து அவரது புத்தக விற்பனைத் தொழிலை மீண்டும் செய்ய உதவியுள்ளோம் என்றார் அவர்.